## அம்பன்கங்கோரள பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்கோரள பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதன மானியம் ரூபா 4,250,000 தொகை மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 4,200,000 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 1,276,714 மற்றும் நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 467,217 என்பன குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்திருந்த 02 வாகனங்களின் கிரயம் சரியாகக் கணக்கீடு செய்யப்படாமல் தனியார் வாகன விற்பனை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டதாக ரூபா 8,723,220 பெறுமதியானது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடையாகக் கிடைத்த ரூபா 15,553,900 பெறுமதியான 03 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்திருந்த தொகையிலிருந்து ரூபா 1,694,807 மாத்திரம் செலவிடப்பட்டு சேமிக்கப்பட்ட தொகை அவ்வமைச்சிற்கு மீள அனுப்பப்பட்டிருந்தும், அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது பிழையாக ரூபா 2,305,193 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,658,457 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,908,648 கூட்டுத்தொகையான 02 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,218,431 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,058,929 தொகையான 04 மீதிகளும் அதில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,619,681 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவு

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 303,652 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 761,497 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 457,845 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

-------------------------------------------------------------

மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினங்களுடன் முன்னைய ஆண்டின் நிலைமையைக் கவனத்தில் கொள்ளும் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவின நிலைமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தொழிற்படு மூலதனத்தில் தொடர்ச்சியான குறைவொன்றைக் காண்பித்தமையால் நிதி முகாமைத்துவம் தொடர்பாக திருப்திகரமான நிலைமையொன்று அதன் மூலம் காண்பிக்கப்படவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

-------------------------------------

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

-------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 07 நீர் செயற்திட்டங்களிலிருந்து 461 நுகர்வோர்களுக்கு நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 378 பேருக்கு நீர்மானி பொருத்தப்பட்டிருக்கவில்லை. அவர்களிடமிருந்து ரூபா 150 தொகையான நிலையான மாதாந்த கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. நீர் மானியைப் பொருத்தி நீர் நுகர்வின் பிரகாரம் கட்டணம் அறவிடுவது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) கும்பல்மூவேயில் ஸ்தாபிக்கப்பட்ட சிறிய அளவிலான நீர் மின் நிலையத்திலிருந்து எந்த வருமானத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திட்டம் அங்கீகரிக்கப்படாது சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 ஏக்கர் வரி**

------------------

நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 52,722 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 13,785 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

**2.3.3 நீர்க் கட்டணம்**

------------------------

நிலுவையாக இருந்த நீரக்கட்டண மீதி ரூபா 197,485 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 74,675 தொகையான மீதியும் உள்ளடக்கியிருந்தது.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

----------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 228,933 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 404,600 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------------

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011-2015 ஆம் ஆண்டுகளை மேவுகை செய்யும் வரையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் வீதி புனரமைத்தல் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) புதிய வருமான உருவாக்க வழிகளை இனங்கண்டு வருமானத்தை உழைப்பதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 7,748,685 ஆக இருந்ததுடன் அதில்

உருவாக்கப்பட்ட வருமானம் ரூபா 450,959 ஆனமையால் உருவாக்கப்பட்ட வருமானம் மொத்த வருமானத்தில் 6 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் குறைந்த வருமானம் பெறும் உள்ளூராட்சி நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 07 மில்லியன் தொகை உரிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாமையினால் மீள அனுப்ப வேண்டியேற்பட்டிருந்தது,

(ஆ) 1992 ஆம் ஆண்டின் போது இராணுவத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டதன் பின்னர் உடைந்த நிலையில் சபைக்கு மீண்டும் சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 312,500 கிரயமான 53-4723 ஆம் இலக்க கெப் வண்டியை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 4,000,000 தொகையை செலவிடல் காலரீதியாக மேற்கொள்ளப்படாமையினால் 07 செயற்திட்டங்களுக்கான ரூபா 1,245,780 தொகை அமைச்சிற்கு மீண்டும் அனுப்பப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைக்குச் சொந்தமான பூஸ்ஸெல்ல இல் உள்ள 80 பேர்ச் அளவான அலுவலக காணியில் அம்பன்கங்ககோரளை பிரதேச செயலகத்தினால் அனுமதியின்றி பல்நோக்குக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், சபை அது தொடர்பாக எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(உ) பிரதேச சபைக்குச் சொந்தமான பூஸ்ஸெல்ல சந்தைத் தொகுதியின் கடையொன்றில் வாடகையாளரினால் அனுமதியின்றி பகுதியொன்று சோக்கப்பட்டு வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிலத்தில் கடைக்கு அருகில் இன்னுமொரு வெளிநபரினாலும் அனுமதியற்ற நிர்மாணமொன்று மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அந்த நிர்மாணங்கள்

தொடர்பாக சபை எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) சபையின் காணியும் கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு தடவை மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 1987 ஆம் ஆண்டின் பின்னர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட ரூபா 395,000 தொகையான 02 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பாவனையிலிருந்து அகற்றுவதற்கோ அல்லது பழுதுபார்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது குறுபேபில இல் 03 ஆம் இலக்க கடை மூடப்பட்டிருந்தது.

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் ரூபா 780,000 பெறுமதியான மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் ரூபா 181,500 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டதுடன் சீபீஎல்கே – 9597 ஆம் இலக்க டிபர் வாகனம் மற்றும் சீபீஜேபீ – 2773 ஆம் இலக்க உழவு இயந்திரம் என்பன வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடுத்தப்படாது விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்தக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 08 வருமான விடயங்களின் ரூபா 696,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 20 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 04 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 18 செலவின விடயங்களுக்கான ரூபா 325,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 36 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 01 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு